# Dina Mani

## Stamp on L V Prasad

Edition: Chennai  Clip Date: 12-September-2006  Page No: 3  Clip Height/Width: 14 cm/4 cm


### எல்.வி.பிரசாத் தபால் தலை வெளியீடு

தெலுங்கு சினிமாவின் முதல் கதாநாயகனும், பிரசாத் குழுமத்தின் நிறுவனருமான எல்.வி.பிரசாத்தின் நினைவு தபால் தலை அண்மையில் வெளியிடப் பட்டது.

மத்திய தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு துறை இணைய மைச்சர் ஷகீல் அகமது வெளியிட, மத்திய சுரங்கத் துறை இணையமைச்சர் தாசரி நாராயண ராவ் பெற்றுக்கொண்டார்.

இந்திய சினிமாவுக்கு ஆற்றிய பணிக்காக, பிரசாத்தின் இந்த நினைவு தபால் தலை வெளியிடப் பட்டது.

இதற்காக, மாநில மற்றும் மத்திய அரசுக்கு பிரசாத்தின் மகன் ரமேஷ் பிரசாத் தனது நன்றியை தெவித்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் நடிகர் கமல்ஹாசன், ராமோஜி ராவ், டி.வி.எஸ்.ராஜு உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.